# <u>சிதம்பரம் நகராட்சி</u>



## <u>2018 ம் ஆண்டு மார்கழி திங்கள் 16–ம் நாள் 31.12.2018 திங்கள் கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெறும் சாதாரண நகர்மன்ற கூட்டம் நடைபெறும்</u>

## <u>மன்றக்கூட்டப் பொருள்</u>

**1)** சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் செங்கல்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையில் தெரிவித்ததற்கிணங்க, சிதம்பரம் சி. தண்டேஸ்வர நல்லூர் உரக்கிடங்கில் ரூ.90.00 இலட்சம் மதிப்பீட்டில் 5 MT கொள்ளளவு கொண்ட மக்காத குப்பைகளை பைரோலிசிஸ் தொழில்நுட்பம் (Pyrolisis Technology) மூலம் கையாளும் பணிக்கு உரிய கருத்துரு தயார் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1931/2018/இ1)

**2)** சிதம்பரம் நகர்பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்களுக்கு மொத்தம் 13674 சொத்துவரி விதிப்புகள் உள்ளன. இந்த சொத்துவரி இனங்களில் 6016 எண்கள் மட்டுமே குடிநீர் இணைப்பு இதுநாள்வரை பெறப்பட்டுள்ளன. இந்நிலையால், குடிநீர் வழங்கல் மற்றும் விநியோக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்குரிய செலவினங்கள், மின் கட்டண செலவினங்கள் மிகுதியடைந்து வருவதை எதிர்கொள்ள இயலாத நிலை உள்ளது. இந்நிலையினை கருத்தில் கொண்டு, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களால், 21.03.2018–ந் தேதிய கலந்தாய்வுக் கூட்டத்தில், பொதுக்குழாய்களை தவிர்க்கவும், இயக்குதல் மற்றும் பராமரித்தல், மின்கட்டண செலவினங்களை எதிர்கொள்ள, அனைத்து சொத்துவரி குடியிருப்புகளுக்கும், குடிநீர் குழாய் வீட்டிணைப்புகள் வழங்கிட தெளிவுரை வழங்கப்பட்டது.

இப்பணிக்காக ஒரு குடிநீர் குழாய் இணைப்பில், பல குடியிருப்புகள் பயன்பாடு மேற்கொள்ளப்படுவதை கணக்கிட்டும், மீதமுள்ள குடியிருப்புகளுக்கு, புதிதாக குடிநீர் இணைப்புகள் வழங்கவேண்டியதை கணக்கீடு செய்யப்பட்டதில், இன்னும் 5444 புதிய குடிநீர் இணைப்புகள் வழங்குவதற்கு 10.05.2018–ஆம் தேதிய நகர்மன்ற தீர்மானம் எண்.18–ல் ரூ.264.50 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO) மூலம் வட்டியில்லா கடனாக நிதி பெற்று குடிநீர் வீட்டிணைப்பு பணிகள் செய்ய அனுமதிக்கப்பட்டதற்கிணங்க,சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.13277/2018/WS1, நாள் 19.06.2018–ல் ரூ.264.50 இலட்சம் டுபிட்கோ மூலம் வட்டியில்லா கடன் நிதி பெற்று பணிகள் செய்ய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், டுபிட்கோ நிறுவனம் ந.க.எண்.TUFIDCO/URF1819-40ULBs/AM(M)/2018 நாள்07.12.2018–ந் தேதிய கடிதத்தில் ரூ.182.40 இலட்சம் மட்டுமே வட்டியில்லா கடன் நிதி வழங்கப்படுவதாக அளிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, இப்பணிக்கு திருத்திய மதிப்பீடுகள் தயார்செய்யப்பட்டதில் 5444 குடிநீர் வீட்டிணைப்புகளுக்கு ரூ.186.10 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO) மூலம் வட்டியில்லா கடனாக நிதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி, தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO) மூலம் வட்டியில்லா கடனாக நிதி ரூ.182.40 இலட்சம் போக, எஞ்சியுள்ள தொகை ரூ.3.70 இலட்சத்திற்கு நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2018–19லிருந்து செலவு மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.1380/2018/இ1)

**3)** இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய சைக்கிள் ஸ்டான்டு முன்புறம் கடை எண்.1 ன் அருகில் உள்ள காலியிடத்தில் ஆவின் பாலகம் அமைத்துக்கொள்ள 12.11.2018ம் தேதிய கடிதத்தில் தடையின்மை சான்று அளிக்கப்பட்டது. விழுப்புரம்–கடலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்., விழுப்புரம் அவர்களின் கடிதம் ந.க.எண்.2243/விற்பனை –1/2014, நாள்.26.11.2018 ல் திரு.மணிகண்டன் என்பவரை ஆவின் பாலக முகவராக உரிய நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் 9X11 சதுரஅடி அளவில் கடை ஒதுக்கீடு செய்ய நகரமைப்பு ஆய்வர் வரைப்படம் பரிந்துரை செய்துள்ளார். மேலும் வருவாய் ஆய்வாளர் ஆவின் பாலகத்திற்கு மாத வாடகையாக ரூ.1150/–ஐ நிர்ணயம் செய்ய விதிகளுக்குட்பட்டு பரிந்துரை அளித்துள்ளார். எனவே, மேற்படி பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட உள்ள ஆவின் பாலகத்திற்கு பொது மேலாளர், ஆவின் பாலகம் என்ற பெயரில் மாத வாடகையாக ரூ.1150/–ஐ கேட்பு எழுப்பிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2516/2018/அ1**

**4)** சிதம்பரம் நகராட்சியில் கீழ்க்காணும் பணியினை அவசர அவசியத்தினை முன்னிட்டும், பொதுமக்கள் நலன் கருதியும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 15–ன்கீழ் பணி செய்து முடிக்கப்பட்டதை, மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | செலவின தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | சிதம்பரம் நகராட்சி வண்டிகேட் அருகே உள்ள பாசிமுத்தான் கால்வாய் கழிவு நீர் பம்பிங் பிரதான குழாய் அமைக்கும் பணி | திருமதி. பி.வளர்மதி, ஒப்பந்ததாரர், 26, தேவதாஸ் நகர், பாம்பன் குடில், சிதம்பரம். | 7,05,000/- |

**அலுவலகக் குறிப்பு :** 1) பதிவு செய்யலாம்.
2) பணிகளின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 15–ன்கீழ் பணிகள் செய்து முடித்து தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**5)** இந்நகராட்சிக்கு சொந்தமான TN 31 K 6619 எண்ணுள்ள டம்பர் பிளேசர் பழுது ஏற்பட்டுள்ளதால், சரிவர இயக்க முடியவில்லை. இதனை தவிர்க்கும் பொருட்டு, மேற்கண்ட டம்பர் பிளேசர் வாகனம் பழுதுநீக்கம் செய்யும் பணிக்கு, உத்தேச செலவின தொகை ரூ.30,000/–க்கு நகராட்சி பொது நிதி 2018–19–லிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**6)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பணியினை செய்ய 07.09.2018 அன்று **பொது நிதி 2018–2019**–ன்கீழ் விலைப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | விலை விகிதம் | விலை சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | பொது நிதி 2018–2019 | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சிக்கு சொந்தமான TN 31-K–6619 டம்பர் பிளேசர் வாகனம் பழுது நீக்கம் செய்யும் பணி | மெஸ்ஸர்ஸ். சரவணா ஆட்டோமொபைல்ஸ், நெ.48, டி.இ.எல்.சி. வணிக வளாகம், செம்மண்டலம், கடலூர் – 607 001. | 30,000/– | ரூ.30,000/– | மதிப்பீட்டின் விலையில் 0.00 % குறைவு |
| | | மெஸ்ஸர்ஸ். ஸ்ரீ லெட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், சூரப்பநாயக்கன் சாவடி, (ஐயனார் கோயில் அருகில்) கடலூர் – 607 002. | | ரூ.31,250/– | மதிப்பீட்டினை விட 4.16 % அதிகம். |
| | | மெஸ்ஸர்ஸ். விநாயகா ஆட்டோ கேரேஜ், 3, ஜெயராம் நகர், (சுபலட்சுமி மஹால் பின்புறம்) அரசு மருத்துவமனை (எதிரில்) வில்வராயநத்தம், கடலூர் – 607 001. | | ரூ.32,000/– | மதிப்பீட்டினை விட 6.67 % அதிகம் |

**அலுவலகக் குறிப்பு :** 1) வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி 0.00 % மதிப்பீட்டு விலைவிகிதத்திலேயே கொடுத்துள்ள **மெஸ்ஸர்ஸ். சரவணா ஆட்டோமொபைல்ஸ், நெ.48, டி.இ.எல்.சி. வணிக வளாகம், செம்மண்டலம், கடலூர் – 607 001 என்ற நிறுவனத்தாரின்** ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். /2018/இ1)

**7)** சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இயங்கிவரும் 79 சிறுமின்விசை பம்புகள் மின் விநியோக வேறுபாட்டின் காரணமாகவும், நிலத்தடி நீர்மட்டம் மாறுபாடுகள் காரணமாகவும் அவ்வப்போது பழுது ஏற்பட்டு விடுகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு, அக்டோபர்–2018 மாதம் முதல் மார்ச்–2019 மாதம் முடிய உள்ள காலத்தில் சிறுமின் விசை பம்புகளில் ஏற்படும் பழுதுகளை அகற்றும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5,00,000/–க்கு நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2018–19–ன்கீழ் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**8)** இந்நகராட்சி குடிநீர் வழங்கல் பணியில் மேற்கு ரதவீதி பழைய OHT மற்றும் கனகசபை OHT ன் நீர் ஆதாரத்திற்காக உள்ள வீரபத்திசாமி கோவில் தெரு, கனகசபை நகர் ஆழ்துளை கிணறுகளின் 25 HP நீர்மூழ்கி இறைப்பான் வடகிழக்கு பருவமழை காரணமாக ஏற்பட்ட மிகுதியான மின்தடையால் அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட துவக்கப்பழு, தொடர் இயக்கம் மற்றும் மின்னழுத்த வேறுபாடு காரணமாக மோட்டார் வைண்டிங் பழுது, பவர் கேபிள் பழுது மற்றும் பம்ப் இம்பலர்கள் தேய்மானம் ஏற்பட்டுள்ளன. இதனால் வார்டு எண். 18,23,25,26,29,30,31,32, பகுதிகளில் சரியாக குடிநீர் விநியோகம் நடைபெறவில்லை. மேற்காணும் பகுதிகளின் குடிநீர் அத்யாவசியத் தேவையை கருத்தில் கொண்டு பணியின் அவசிய அவசரம் கருதி உடன் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், பணி செய்வதற்கு அனுமதியும், பணிக்கான உத்தேச மதிப்பீடு செலவினம் ரூ. 1,75,000/–க்கும் பணியினை குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2018–19ன் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி , தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதிப் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியுதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**9)** இந்நகராட்சியில் நகரமைப்பு பிரிவு சங்கிலியாளராக பணிபுரிந்த திரு.ஆர்.வீரமுத்து த/பெ.இராஜமாணிக்கம் என்பவர் அளித்துள்ள கல்வி சான்று உண்மைதன்மை இல்லை என உறுதிபடுத்தப்பட்ட பின்னர் அவரை பணி நீக்கம் செய்யப்பட்டார். இந்நிலையில் மனுதாரர் பணி நீக்கத்தினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.WP NO.21279/2014 ல் நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் நகராட்சி சார்பில் வழக்காடுவதற்கு உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.P.சீனிவாசன் என்பவர் வாதாடவதற்கும் அதற்குண்டான செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) அவசர அவசியம் கருதி வழக்கிற்காக எதிர்வாதுரை தாக்கல் செய்வதற்கும் வழக்கறிஞரின் செலவுத்தொகை ரூ.15000/– தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.6450/1999/சி1

**10)** சிதம்பரம் நகராட்சி பகுதியில் உள்ள தந்தை பெரியார் பேருந்து நிலையத்தில், வட்டார போக்குவரத்து விதிகளின்படி, ஊர் பெயர்கள் மற்றும் தடவழிகள் குறித்த பெயர் பலகைகள் அழிந்துள்ளதால், அதனை புதுப்பித்து எழுதுவதற்கு ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.1,10,000/–க்கு நகராட்சி பொது நிதி 2018–19–ன்கீழ் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**11)** சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ராஜலட்சுமி நகர், கச்சேரி தெரு மற்றும் வாகீச நகரில் புதிதாகஅமைக்கப்பட்டுள்ள நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் செயலாக்க மைங்களுக்கு அணுகுசாலை அமைத்தல் , மற்றும் மேற்படி நுண்ணுயிர் மையங்களில் மிகுதியான முறையில் உள்ள மேடு பள்ளங்கள், நீர்த்தேக்கங்கள் உள்ளதை, மண்தோண்டும் வாகனம் (JCB) மூலம் சமன்படுத்துவதற்கு தயார்

செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.65,000/–க்கும், பணியினை நகராட்சி பொது நிதி 2018–19–ன்கீழ் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**12)** சிதம்பரம் நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி ஆணையரது அலுவலக பயன்பாட்டிலிருந்த பதிவு எண். TN 31 P 6678 (பொலிரோ வாகனம்) 2003–ல் வாங்கப்பட்டு, வாகனம் அடிக்கடி பயன்பாட்டில் இருந்ததையடுத்து, பழுது ஏற்பட்டு பயன்பாடற்ற நிலையில் இருந்தது. அதனை தொடர்ந்து 2016 முதல் இயக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டது. இந்நிலையில், சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 13.05.2018 மற்றும் 12.07.2018–ந் தேதிய ந.க.2652/2018/P2 எண்ணுள்ள கடிதங்கள் மற்றும் செங்கல்பட்டு மண்டலம், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் 25.05.2018–ந் தேதிய ந.க.949/2018/B1 எண்ணுள்ள கடிதத்தின் வழிகாட்டுதல்படி, மேற்கண்ட வாகனத்தை கழிவு செய்வதற்கு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதையடுத்து, சென்னை–42, மோட்டார் வாகன பராமரிப்புத் துறை, இயக்குநர் அவர்களின் 10.10.2018–ந் தேதிய ந.க.செ.மு.மூ.எண்.H1/12912/2018 எண்ணுள்ள கடிதத்தில், தொழில்நுட்ப வல்லுநர் ஆய்வறிக்கையில் குறிப்பிட்ட தொகைக்கு குறையாமல், இவ்வூர்தியை அரசிடம் அனுமதி பெற்று விற்பனை செய்து கொள்ளலாம் என்று கீழ்காணும் விபரப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவரம்**

| வ. எண். | வாகன எண். | தயாரிப்பு | வகை | எரி பொருள் | ஆன செலவு | ஓடியுள்ள தூரம் | பழுது நீக்கம் செய்ய எதிர்பார்க்கப் படும் தொகை | விற்பனை செய்யப் பட்டால் எதிர் பார்க்கப்படும் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | TN 31 P 6678 | 2003 | Bolero | D | 432904 | 227489 | ரூ.1,46,000/– | ரூ.46,400/– |

மேற்படி வாகனத்தை பொது ஏலத்தில் விடுவதற்கும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. தற்போது ஆணையர் பயன்படுத்தும் வாகனம், 6 ஆண்டுகளுக்கு முன்பு நகர்மன்ற தலைவர் அவர்களுக்காக வாங்கப்பட்டது. இவ்வாகனம் பழுதுகள் ஏற்பட்டு, பழுது செலவினம் மிகையாகின்றது. மேலும், தற்போது, நடைபெறும் புதிய பாதாள சாக்கடை திட்டப்பணிகள், திடக்கழிவு மேலாண்மை பணிகள், 4கி.மீ. தொலைவில் உள்ள லால்புரம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், 6கி.மீ. தொலைவில் உள்ள வக்காரமாரி தலைமை நீரேற்று நிலையம் மற்றும் 11 கி.மீ. தொலைவில் உள்ள நளன்புத்தூர் நீரேற்று நிலையம் போன்றவைகளை பார்வையிடவும், உயர் அலுவலர்களின் ஆய்வுக்கூட்டத்தில் கலந்துகொள்ளும்பொருட்டு, வெளியூர் சென்று வரவும், போதிய வாகன வசதி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளருக்கு இல்லாததால், பணிகளில் சுணக்கம் ஏற்படுகிறது. எனவே, தற்போதுள்ள ஆணையர் அவர்கள் பயன்படுத்தும் வாகனம் கழிவு செய்யும் நிலையில் உள்ளதால், புதிய வாகனம் ஆணையாளருக்கு வாங்குவதற்கு, ஒரு ஈப்பு Bolero DGS & D விலைவிகிதத்தின்படி கொள்முதல் செய்யவும், அதற்கான தோராய செலவினம் ரூ.10,00,000/–க்கு பொது நிதி 2018–19–ல் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**13)** சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ராஜலட்சுமி நகர், கச்சேரி தெரு மற்றும் வாகீச நகரில் புதிதாகஅமைக்கப்பட்டுள்ள நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் செயலாக்க மைங்களில் பணியாளர்களின் நலன் கருதியும், சுற்றுப்புற சுகாதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டும் பூச்சிகளை கொல்லும் சாதனங்கள் அமைக்கும் பணிக்கு ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.4,85,000/–க்கு நகராட்சி பொது நிதி 2018–19–ன்கீழ் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**14)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பணியினை செய்ய **30.11.2018** அன்று **குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2018–19** கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2018–19** | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட மேற்கு ரத வீதி பழைய OHT –ன் நீர் ஆதாரம் வீரபத்திரசாமி கோவில் தெரு ஆழ்துளை கிணறு 25 எச்.பி நீர்மூழ்கி மோட்டார் பம்ப் பழுது நீக்கும் பணி. | **M/s.Balan Electrical Works, 10/2,Vellapirandhan Street, Chidambaram.** | 1,75,000/– | மதிப்பீட்டினை விட 0.21 % குறைவு | --- |
| | | **M/s.J.P Electrical Works, Main Road, Vadalore.** | | --- | மதிப்பீட்டினை விட 0.65 % அதிகம் |

**அலுவலகக் குறிப்பு :** 1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி மதிப்பீட்டிடைவிட 0.21 % குறைவாக கொடுத்துள்ள **M/s.Balan Electrical Works, 10/2,Vellapirandhan Street, Chidambaram.** நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**15)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பணியினை செய்ய **30.11.2018** அன்று **குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2018–19** கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2018–19** | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சி பகுதிகளில் உள்ள 79 சிறுமின்விசை பம்புகள் பழுது நீக்கம் செய்து பராமரிப்பு செய்யும் பணி. | **M/s.Balan Electrical Works, 10/2,Vellapirandhan Street, Chidambaram.** | 5,00,000/– | மதிப்பீட்டினை விட 0.14 % குறைவு | --- |
| | | **M/s.J.P Electrical Works, Main Road, Vadalore.** | | --- | மதிப்பீட்டினை விட 1.23 % அதிகம் |

**அலுவலகக் குறிப்பு :** 1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி மதிப்பீட்டிடைவிட 0.14 % குறைவாக கொடுத்துள்ள **M/s.Balan Electrical Works, 10/2,Vellapirandhan Street, Chidambaram.** நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

2) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**16)** சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4, வடக்கு மெயின் ரோட்டில் உழவர் சந்தை அருகே புதிதாக கட்டப்பட்டுள்ள 13 எண்கள் வணிக வளாக கடைகளில் ஆவின் சொசைட்டிக்காக ஒதுக்கப்பட்ட நான்கு கடைகள் உள்பட 9 கடைகளுக்கு ஒருமுனை மின் இணைப்பு பெற ஏதுவாக வயரிங் மற்றும் சர்வீஸ்

வயர் அமைக்கும் பணிக்கு ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.65,000/—க்கு நகராட்சி பொது நிதி 2018—19—ன்கீழ் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**17)** சிதம்பரம் நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் 2015—16—ன்கீழ் 13 பணிகள் ரூ.1035.74 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வந்தது. பழைய குப்பைகளை அகற்றி உரக்கிடங்கு நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்றால் மட்டுமே எஞ்சியுள்ள பணிகளை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலையில் 12.03.2018 அன்று நடைபெற்ற நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் தற்போது வரை முடிக்கப்பட்ட பணிகள் ம ற்றும் நடைபெற்று வரும் பணிகளை தவிர எஞ்சியுள்ள பணிகளை இரத்து செய்துவிட்டு, நகராட்சி பகுதிகளில் பூங்கா மற்றும் காலியிடங்களில் நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் செயலாக்க மையங்கள் அமைத்திடவும், குப்பைகள் சேகரம் செய்ய வாகனங்கள் வாங்கிடவும் மற்றும் அம்மையத்திற்குரிய அடிப்படை வசதிகள் செய்துதருமாறு அறிவுறுத்தப்பட்டது.

அதன்பேரில், 12.03.2018 வரை முடிக்கப்பட்ட மூன்று பணிகள் மற்றும் நடைபெற்று வரும் மூன்று பணிகள் ஆகக்கூடுதல் 6 பணிகள் தவிர எஞ்சியுள்ள 7 பணிகளை இரத்து செய்துவிட்டு, புதிதாக 15 பணிகள் சேர்த்து மொத்தம் 21 பணிகளுக்கு ரூ.912.74 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்து நிர்வாக அனுமதி கோரி, இவ்வலுவலக 30.11.2018—ந் தேதிய ந.க.4996/2014/இ1 எண்ணுள்ள கடிதம்மூலம் அரசுக்கு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டது. 21 பணிகளுக்கு ரூ.911.96 இலட்சம் திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேலும், பழைய பணிகளின் சேமிப்பு தொகை ரூ.726.28 இலட்சம் எனவும், அதில் முடிக்கப்பட்ட மற்றும் நடைபெற்றுவரும் 5 பணிகள் தவிர, எஞ்சியுள்ள Bio-mining பணிகள் சேர்த்து, 16 பணிகளை ரூ.602.50 இலட்சம் மதிப்பீட்டில் தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை நிதியின்கீழ் செய்வதற்கு, சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.22854/2018/P3, நாள் 26.12.2018—ன்மூலம் நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்படி 16 பணிகளில் 13 பணிகளுக்கு, நகராட்சி பொது நிதி/திடக்கழிவு மேலாண்மை நிதியின்கீழ் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. சில பணிகளுக்கு ஒப்பந்ததாரர்களுக்கு நகராட்சி பொது நிதியில் தொகை பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

தற்போது மீதமுள்ள கீழ்காணும் விபரப்படியான 3 பணிகளுக்கு திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நிதியின்கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரவும், ஏற்கனவே பொது நிதியின்கீழ் செய்யப்பட்ட 13 பணிகளையும் திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதிப்பணியாக மாற்றும் செய்து தொகை வழங்கிடவும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பணிகளின் விபரம் பின்வருமாறு.**

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூபாய் லட்சத்தில் ) |
|---|---|---|
| 1 | 2 | 3 |

| | | |
|---|---|---|
| 1 | வாகீச நகர் பூங்கா உரம் தயாரிக்கும் செயலாக்க மையத்திற்கு சுற்று ச்சுவர், பேவர் பிளாக், தண்ணீர் வசதி, மின்சார வசதி மற்றும் தடுப்பு சுவர் அமைக்கும் பணி | 14.75 |
| 2 | நகராட்சி அலுவலக வளாகத்தின் அருகில் உரம் தயாரிக்கும் செயலாக்க மையத்திற்கு பேவர் பிளாக், தண்ணீர் வசதி, மற்றும் தடுப்புகள் அமைக்கும் பணி | 12.00 |
| 3 | சிதம்பரம் நகராட்சி இராஜலட்சுமி நகர் பகுதியில் உரம் தயாரிக்கும் செயலாக்க மையத்திற்கு பேவர் பிளாக், தண்ணீர் வசதி, மின்சார வசதி மற்றும் தடுப்புகள் அமைக்கும் பணி | 12.00 |

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) ஏற்கனவே முடிக்கப்பட்ட பணிகள் தவிர, நடைபெற்று வரும் மூன்று பணிகள் சேர்த்து பொதுநிதியில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை திடக்கழிவு மேலாண்மை நிதி 2015–16–ன்கீழ் ஈடுசெய்து கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**18)** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 6ல் வாகீச நகர் பூங்காவில் அரசின் தற்போதைய கொள்ளை முடிவுப்படி மக்கும் குப்பைகளை உரமாக மாற்றும் பணிக்கு நுண்ணுயிர் உரக்கிடங்கு மையம் புதிதாக நிர்மானிக்கப்பட்டு கடந்த 8.10.2018 முதல் செயல்பட்டு வருகின்றன. இந்த மையத்திற்கு மிக அருகாமையிலேயே பல குடியிருப்புகள் இருந்தபோதிலும் Micro Compost Center மேல்கூரை முடியும் இடத்திற்கு ஒரு மீட்டருக்கு அருகே ஒரு குடியிருப்புகள் உள்ளன. தற்போது நுண்ணுயிர் உரக்கிடங்கு மையம் செயல்பட துவங்கி உரிய கால அவகாசத்தில் உரம் தயார் செய்யப்பட்டு வரும் நிலையில் மிகவும் துர்நாற்றம் ஏற்பட்டு தொற்று நோய்கள் பரவுவதாக அப்பகுதி பொதுமக்களிடமிருந்து புகார்கள் வரப்பெற்றத ற்கிணங்க, 10.12.2018 தேதியன்று சார் ஆட்சியர் அவர்களால் மேற்படி மையத்தை தள ஆய்வு செய்து உரிய பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார்கள். எனவே, பொதுமக்களின் நலன் கருதியும், துர்நா ற்றத்தை தவிர்க்கவும் நுண்ணுயிர் உரக்கிடங்கு மையத்திற்கு தடுப்பு ஷெல்டர் 62 மீட்டர் நீளத்திற்கு அமைக்கும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.4,00,000/–க்கு நகராட்சி பொது நிதி 2018–19–ன் கீழ் செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**19)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பணியினை செய்ய 18.12.2018 அன்று **குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2018–19** கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2018–19 | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட பல்வேறு இடங்களில் புதைவடிகால் ஆய்வு குழாய் குழிகள் உயர்த்தி கட்டும் பணி | **திருமதி.ஆர்.கோமதி,** ஒப்பந்ததாரர், சிதம்பரம் | 1,45,000/– | மதிப்பீட்டினை விட 0.03 % குறைவு | ––– |
| | | **திரு.கே.ரஜினிகாந்த்,** ஒப்பந்ததாரர், சி.முட்லூர் | | ––– | மதிப்பீட்டினை விட 1.12 % அதிகம் |

**அலுவலகக் குறிப்பு :** 1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி மதிப்பீட்டிடைவிட 0.03 % குறைவாக கொடுத்துள்ள **திருமதி ஆர்.கோமதி சிதம்பரம் என்ற ஒப்பந்ததாரரின்** ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**20)** சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21 வ. உ.சி. தெரு மற்றும் 23–ல் மாரியம்மன் கோயில் தெரு ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் நடைபெற்றுவரும் போது, குடிநீர் குழாய்கள் அவ்வப்போது துண்டிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதிகளுக்கு குடிநீர் சரிவர விநியோகம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டு, பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். இதனை தவிர்த்திடும் பொருட்டு மேற்கண்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோக குழாயினை புதுப்பிக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4,10,000/–க்கு நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதி2018–19–ன்கீழ் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**21)** சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 மற்றும் 21–ல் காரியபெருமாள் கோயில் தெரு, மன்மதசாமி நகர், கோவிந்தசாமி தெரு மற்றும் குமரன் தெரு ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் நடைபெற்றுவரும் போது, குடிநீர் குழாய்கள் அவ்வப்போது துண்டிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதிகளுக்கு குடிநீர் சரிவர விநியோகம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டு, பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். இதனை தவிர்த்திடும் பொருட்டு மேற்கண்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோக குழாயினை புதுப்பிக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4,00,000/–க்கு நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதி2018–19–ன்கீழ் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**22)** சிதம்பரம் நகராட்சியில் துறைமூலம் வசூல் செய்யும் பணிக்கு தேவையான ரசீது புத்தகங்கள் அ ச்சிட்டுக்கொள்ள ஆகும் செலவீனம் ரூ.12250/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அவசர அவசியம் கருதி பிரிவு 15 ன் கீழ் வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.3937/2017/அ1**

**23)** இந்நகராட்டியின் குத்தகை உரிம இனங்களில் யாத்திரிகள் ஊர்த்திகளுக்கான கட்டண வசூல் உரிமத்தினை 2018–19 முதல் 2020–2021 வரையிலான மூன்றாண்டு தொகுப்பு காலத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் திரு.எஸ்.அன்பழகன் அவர்கள் வழங்கிய ரூ.2700700/–க்கு ஒப்பந்தப்புகள்ளி ஏற்கப்பட்டு 2018–2019ம் ஆண்டிற்கான குத்தகை உரிமம் அளிக்கப்பட்டது. அன்னார் தமக்கு உடல் நலம் சரியில்லை எனவும் வெளியூர் சென்று சிகிச்சை பெ ற்றுவருவதால் இந்த நிதியாண்டு குத்தகை உரிமத்தினை நகராட்சியில் ஒப்படைப்பு செய்கிறேன் என 26.11.2017ம் கடிதம் அளித்துள்ளார்.

மேலும் காவல் துறையால் கீழவீதி மற்றும் வடக்கு வீதியில் பேருந்துக்கள் நிறுத்திட அனுமதிக்காதா தில்லை காளியம்மன் கோவில் நிர்வாகத்தினால் அமைக்கப்பட்ட இடத்தில்

பேருந்துகள் மற்றும் இதர வாகனத்தினை நிறுத்திவிட்டு சென்றுவிடுகிறார்கள், இதனால் எனக்கு பெறும் தொகை நஷ்டம் ஏற்பட்டு வருகிறது எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்படி யாத்திரிகள் ஊர்த்திகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தினை **2019–2020** மற்றும் **2020–2021** ஆகிய ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விட பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3497/2017/அ1**

இடம்: சிதம்பரம்
நாள்: 31.12. 2018

தனி அலுவலர்,
சிதம்பரம் நகராட்சி